

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. மற்றும் தஞ்சை சட்டமன்ற தொகுதி தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா மற்றும் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் அ.இராசா எம்.பி அவர்கள் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்தியலிங்கம், ச.முரசொலி எம்.பி, முன்னாள் எம்.எல்.ஏகள் டி.கே.ஜி.நீலமேகம், எம்.ரெங்கசாமி, கே.டி.மகேஸ்கிருஷ்ணசாமி, சி.இராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு உறுப்பினர் சி.இறைவன், மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ தலைமையில்

# நீலகிரி மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம்!



உதகை, ஜூலை 14 -

நீலகிரி மாவட்ட தி.மு.க. நகர - ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் - குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம். ராஜூ தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் வரவேற்றார். மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் தம்பி இஸ்மாயில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் அனைத்து நகர, ஒன்றிய, பேரூர் கழக பகுதிகளிலும் செயல்வீரர்கள் கூட்டங்கள் நடத்துவது குறித்து ஆலோசிக்கப் பட்டது.

கூட்டத்தில் நகர கழக செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் பரமசிவன், தொரை, காமராஜ், லாரன்ஸ், நெல்லை கண்ணன், பீமன், பிரேம்குமார், சிவானந்தராஜா, சுஜேஷ், உத்தமன், ஜெகதீசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், நடராஜ், சதீஷ்குமார், ரமேஷ்குமார், சஞ்சீவ்குமார், சுந்தர்ராஜ், முத்து, சுப்ரமணி, சின்னவர், மார்டின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்ட முடிவில் மாவட்ட அவை தலைவர் போஜன் நன்றி கூறினார்.

## தென்றல் செல்வராஜ் தலைமை! மணிமாறன் தென்றல் வரவேற்புரை!

## எம்.அமுதபாரதி - இரா.நவநீதிகிருஷ்ணன் முன்னிலை!

# கழக சட்டத்திட்ட திருத்தக் குழு சார்பில் கலைஞர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

## கோவி செழியன் - ஈரோடு இறைவன் - திப்பம்பட்டி ஆறுசாமி - தளபதி முருகேசன் - கே.ஈஸ்வரசாமி எம்.பி. - மு.கண்ணப்பன் சிறப்புரை!

பொள்ளாச்சி, ஜூலை 14 -

கழக சட்ட திட்ட திருத்தக் குழு சார்பில் கழக சட்ட திட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் இன்று(14.7.2026-சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் நடைபெறுகின்றது.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு தென்றல் செல்வராஜ் தலைமை வகிக்கிறார். கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

எம்.அமுதபாரதி, இரா. நவநீதிகிருஷ்ணன், பி.ராஜூ, வே.மருதவேல், செ.ஆ.துரை, கி.ரமேஷ், எஸ்.கிரிகதிர்வேல், அல்தாப் உசேன், ஒ.வி.எ. தேவசேனாதிபதி, டி.யுவராஜ், எஸ்.எஸ்.யுவராஜ், எஸ்.ஆர்.அண்ணாதுரை, கே.வி.கே.எஸ்.சபரிகார்த்திகேயன், ந.சியாமளா, எஸ்.கௌதமன், ஆர்.நாச்சிமுத்து, பி.ஏ.செந்தில், சி.எஸ்.கருப்பையா, எம்.முத்துகுமார், ஏ.பி.செந்தில்குமார், வி.டி.பார்த்திபன், இ.ராமகிருஷ் ணன், ஒ.வி.எம். சோமசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் முனைவர் கோவி.செழியின், கழக இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன், மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் திப்பம் பட்டி ஆறுச்சாமி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் தளபதி முருகேசன், கே.ஈஸ்வரசாமி எம்.பி., கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் மு.கண்ணப்பன், கே.நித்தியானந்தன் எம்.எல்.ஏ., குட்டி என்கிற ஆ.சுதாகர் எம்.எல்.ஏ., இரா. தனம் தங்கதுரை, ச.பூங்கொடி மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.

எஸ்.சரவண குமார் நன்றி கூறுகிறார்.



விடுதலைப் போராட்ட வரலாற்றின் முதல் வீரர், மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் 269வது பிறந்தநாளை முன்னிட்டு அழகு முத்துகோன் நற்பணி மன்றத்தின் சார்பில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இதில் சிவானந்தா காலனி பகுதி கழக பொறுப்பாளர் டெம்போ சிவகுமார், நற்பணி மன்ற நிர்வாகிகள் மாடசாமி, கருப்புசாமி, தமிழ்ச்செல்வன், கே.ரமேஷ், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் அர்ஜுன், வட்டப் பொறுப்பாளர்கள் மணி, சுரேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு தெற்கு மாவட்டம் மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயல் வீரர்கள் கூட்டம் அவல்பூந்துறையில் அவைத்தலைவர் டி.சி.ஜெயபால் தலைமையில், ஒன்றிய கழகச் செயலாளர் சு.குணசேகரன் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். கூட்டத்தில் கழகக் கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி. சந்திரகுமார் EX MLA. கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், கழக மாணவரணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார் பொதுக்குழு உறுப்பினர் என்.டி.பத்மநாபன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனசேகர், பேரூர் கழக செயலாளர் சாமியப்பன்(எ) சண்முகசுந்தரம் உள்ளிட்ட ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், BLA2, BLC, BDA, கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

## ஒரு மனிதருக்கு மாதத்திற்கு 14 கிலோ ஊட்டச்சத்து தேவை என்று மருத்துவர்கள் கூறும் நிலையில், 7 கிலோ மட்டுமே தருவோம் என்று ஒன்றிய அரசு கூறுவது நியாயமா?

# கார்ப்பரேட் கனவான்களுக்குப் பல்லாயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி - பசித்த வயிறுகளுக்குப் பட்டினிதான் பரிசா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூலை 14-

ஒரு மனிதருக்கு மாதத்திற்கு 14 கிலோ ஊட்டச்சத்து தேவை என்று மருத்துவர்கள் கூறும் நிலையில், 7 கிலோ மட்டுமே தருவோம் என்று ஒன்றிய அரசு கூறுவது நியாயமா? கார்ப்பரேட் கனவான்களுக்குப் பல்லாயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி - பசித்த வயிறுகளுக்குப் பட்டினிதான் பரிசா? என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

இவ்வாண்டு ஜூலை 20 ஆம் தேதி நாடாளுமன்றத் தொடர் கூட்டம் தொடங்கி நடைபெறவிருக்கும் நிலையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிக்கட்டுமானத்தை மாற்றிவிட அனைத்து ஏற்பாடுகளில் மும்முரமாக ஆர்.எஸ்.எஸ். மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி முழு வேகத்தில் இருக்கிறது.

**‘அரிய வகை’ உயர்ஜாதி ஏழைகளுக்கு இட ஒதுக்கீடு நிதி உதவிகளை வாரி இறைத்துள்ள பா.ஜ.க. அரசு!**

சமதர்மம், கூட்டாட்சி, மாநில உரிமைகள், ஏழை, எளிய உழைக்கும் மக்களின் வாழ்வுரிமைகளையும் பறிக்கும் பல புதிய சட்டமசோதாக்களையும், சட்டத் திரு த்தங்களையும் கொண்டு வந்து அனைவருக்கும் கல்வி என்பதைப் பறித்து, உயர்ஜாதி, உயர் வர்க்கத்திற்கே இனி கல்வி கிட்டும் வாய்ப்பு என்ற சூழலை உருவாக்கி, டாக்டர் அம்பேத்கர் எழுதிய அரசியலமைப்புச் சட்டத்தின் பீடிகையில் உள்ள சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதி, சமதர்மம், ஜனநாயகக் குடியரசு ஆகிய கொள்கைகளைக் காணாமற் போகச் செய்து, பன்மதம், பன்மொழி, பல கலாச்சாரங்கள், நாட்டின் பன்மைத் தத்துவங்களைத் தூக்கி எறிந்து, ஒற்றை ஆட்சி, அதுவும் ஹிந்துராஷ்டிரம், ஆரிய சமஸ்கிருத கலாச்சாரம் மட்டுமே என்று கொண்டு வர முயற்சி க்கிறது. ஒருபுறத்தில் ‘ஏழைகள்’ என்பவர்களை வரையறை செய்யும் அளவுகோலில் ‘உயர்ஜாதி ஏழைகள்’ என்று பிரித்துக் கூறி, ஆண்டுக்கு 8 லட்சம் ரூபாய் - நாள் ஒன்றுக்கு சுமார் ரூ.2000 சம்பாதிக்கும் ‘அரிய வகை’ உயர் ஜாதி ஏழைகளுக்கு இட ஒதுக்கீடு அவர்களது எண்ணிக்கைக்கும் கூடுதல் விகிதமாக வழங்கி நிதி உதவிகளையும் வாரி இறைத்து ள்ளது பா.ஜ.க. அரசு!

மறுபுறத்தில் உண்மையாகவே நாட்டில் ஒரு வேளை உணவுக்கே வழி இல்லாது தவிக்கும் மக்களுக்கு, எளிய விலையில் இலவசமாக பசி, பட்டினி போக்க முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசால் அளிக்கப்பட்ட உணவு உரிமையைப் - பறிக்க சட்டச் சம்மட்டியை ஓங்கிட தயாராகி வருகின்றனர் என்பது அதிர்ச்சிக்குரிய ஆபத்தாகும்!

ஒன்றிய அரசின் நுகர்வோர் உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்மூலம் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ள புதிய தேசிய உணவுப் பாதுகாப்புத் திருத்த மசோதா -

தற்போது குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்படும் 35 கிலோ ரேஷன் உணவுப் பங்கீட்டு அளவை, நபர் ஒருவருக்கு வெறும் 7 கிலோவாகக் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாம்!

இத்துடன், ஒரு குடும்பத்திற்கான அதிகபட்ச வரம்பு அளவை 35 கிலோவாக நிர்ணயிக்கிறது! இதற்கு விசித்திரமான விளக்கமாக சிறிய மற்றும் பெரிய குடும்பங்களுக்கிடையே சமமான விநியோகத்தை உறுதி செய்து சீர்படுத்தவே இந்த நடவடிக்கை என்றும், சிறிதும் கருணையின்றி விளக்கம் கூறுகிறது ஒன்றிய அரசின் துறை.

புதிய விழைவு உத்தேசப்படி, 5 உறுப்பினர்களுக்கு மேல் உள்ள ஏழைக் குடும்பங்களில், தலா 7 கிலோ, அதிகபட்சம் 35 கிலோ என்ற அவர்களது திட்டப்படி பார்த்தால், ஒட்டுமொத்தப் பங்கீடு மிகக் குறைந்து பாதிப்பு ஏற்படுமே!

**ஓரணியில் நின்று, தடுத்து நிறுத்துவது அவசிய, அவசரமாகும்!**

ஏழைகளை மேலும் படு ஏழைகளாக, பட்டினிப் பட்டாளங்களாகவே ஆக்கும் ஆபத்தான நிலையை ஏற்படுத்தக் கூடும்.

எதிர்க்கட்சிகள் இதனைக் கடுமையாகக் கண்டித்து, நிறைவேற்றவிடாமல் தோற்கடிக்க ஓரணியில் நின்று, தடுத்து நிறுத்துவது அவசிய, அவசரமாகும்!

இந்திய மருத்துவக் கவுன்சில் ICMR கொடுத்த பழைய பரிந்துரைகளின் படி, ஒரு மனிதனின் உடல் வளர்ச்சிக்கும், உடல்நலப் பாதுகாப்புக்கும், மாதத்திற்குத் தலா 14 கிலோ உணவு தானியங்கள் தேவை என்று கூறியுள்ளது.

ஊட்டச்சத்து நிபுணர்களும், மருத்துவ அறிஞர்களும் இதுவே (35 கிலோ அளவு) போதாது என்று பரிந்துரைத்து, கருத்துக் கூறியுள்ள நிலையில், ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கையைவிட வாக்களித்த ஏழைகளின் வயிற்றில் ஈரத் துணியுடன் இருக்கும் பரிதாப த்திற்கு தொடக்க விழா நடத்துவது நியாயமா? அறமா?

**உழைக்கும் வர்க்கத்தைப் பட்டினிப் போடலாமா?**

வாஜ்பேயி ஆட்சி முடிந்து 10 ஆண்டுகளுக்குப் பிறகு, 2014 இல் ஆர்.எஸ்.எஸ். மோடி அவர்களது பி.ஜே.பி. ஆட்சி அமைந்தபோது, ‘சப்கா சாத், சப்கா விகாஸ்’ எல்லோரையும் உள்ளடக்கிய நாட்டு வளர்ச்சி (Inclusive Growth) என்று முழங்கியதை ஏனோ ‘வசதியாக’ மறந்துவிட்டு, கார்ப்பரேட் கனவான்களுக்குப் பல்லாயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்து, உழைக்கும் வர்க்கத்தைப் பட்டினிப் போடலாமா?

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

# வேப்பூர் தெற்கு ஒன்றிய செயல் வீரர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சிறப்புரை!

பெரம்பலூர், ஜூலை 14 -

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் தெற்கு ஒன்றிய செயல் வீரர்கள் கூட்டம், ஒன்றிய கழக செயலாளர் சி. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

மாநில ஆதி திராவிடர் நலக்குழு துணை செயலாளர் பா. துரைசாமி, மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், மாவட்ட கழக துணை செயலாளர் சன். சம்பத்,

பொதுக்குழு உறுப்பினர்கள் பட்டுசெல்வி ராஜேந்திரன், பீல்வாடி ராமச்சந்திரன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காடூர் கவியரசு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மா. பிரபாகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விடுதலைப் போராட்ட வரலாற்றின் முதல் வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் 269வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) ஆ.சுதாகர் அவர்களும் இணைந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.